14.03.2025

அசல் வழக்கு எண்: 245/2014

பி.வா.சா.1 சாட்சி சசிகுமார் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்து எந்த வருவாய் கிராமத்தில் கட்டுப்பட்டது என்று சொல்ல முடியுமா என்றால் பேய்குளம் வருவாய் கிராமத்தில் கட்டுப்பட்டது. தாவா சொத்து என்னவாக உள்ளது என்றால் தோட்டமாக உள்ளது. தாவா டிரஸ்டை யார் ஆதியில் உருவாக்கிறது என்றால் யாரும் உருவாக்கவில்லை. எனது தகப்பனார் 2013ம் ஆண்டு பதிவு செய்துள்ளார். 2013ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட டிரஸ்ட் சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் தாககல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. டிரஸ்ட் மூலமாக என்ன பணி செய்யப்பட்டு வருகிறது என்றால் சித்தி விநாயகர் கோவிலையும், எனது தாத்தாவின் ஜீவசமாதியையும் பராமரித்து வருகிறோம். எனது தாத்தா என்பது யார் என்றால் சுப்பாரெட்டியார் ஆவார்.

சித்தி விநாயகர் கோவில் என்பது பொதுவான கோவிலா அல்லது தனிப்பட்ட சமுகத்திற்குரிய கோவிலா என்றால் எனது குடும்பத்திற்கு உரிய கோவிலாகும். கோவில் நிர்வாகத்திற்குரிய செலவுகளை எந்த வருமானத்தில் இருந்து செய்து வருகிறோம் என்றால் கோவிலுக்கு எனது தாத்தா சொத்தை செட்டில்மெண்டு எழுதி வைத்துள்ளார். அந்த சொத்தில் இருந்து வரும் வருமானத்தை வைத்து செலவு செய்து வருகிறோம். மேற்படி செட்டில்மெண்டு ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. செட்டில்மெண்டு ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணமா அல்லது பதவு செய்யப்படாத ஆவணமா என்றால் ஞாபகம் இல்லை. சுப்பாரெட்டியாரின் வாரிசுகள் யார் யார் என்றால் பசுபதியம்மாள்,

லிங்கம்மாள், லெட்சுமியம்மாள் ஆகிய 3 பெண் மக்கள் ஆவார்கள். சுப்பாரெட்டியார் அவர்கள் சொல்லி டிரஸ்ட் ஏற்படுத்தப்பட்டதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டதா என்றால் ஆமாம்.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி பி.வா.சா.1 குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)